Mrs. T. Gorden

உலகப் பொதுமறை

# வள்ளுவம்

தொகுதி–2




தொகுப்பாசிரியர்

**உடையார்கோவில் குணா**

பதிப்பாசிரியர்கள்

புலவர் **தீ.விஜயசுதா**

முனைவர் **பா.இராஜ்குமார்**

பேராசிரியர் **க.கருத்தபாண்டி**

திருமதி. **பாரதி அனிதன்**

எழுத்தர் **க.முருகன்**

கவிஞர் **ந.கு.முல்லைச் செல்வன்**

**உலகத் திருக்குறள் மாநாடு - 2019**

**கோலாலம்பூர் – மலேசியா.**

---

உள்ளத்தனையது உயர்வு

தமிழ்த்தாய் அறக்கட்டளை வெளியீடு-11

# நூல் விவரம்

தலைப்பு : உலகப் பொதுமறை வள்ளுவம் (தொகுதி–2)
(உலகத் திருக்குறள் மாநாட்டு கருத்தரங்கம்)

தொகுப்பாசிரியர் : **உடையார்கோவில் குணா.**

துணை
பதிப்பாசிரியர்கள் : புலவர் **தீ.விஜயசுதா**
முனைவர் **பா.இராஜ்குமார்**
பேராசிரியர் **க.கருத்தபாண்டி**
திருமதி. **பாரதி அனிதன்**
எழுத்தர் **க.முருகன்**
கவிஞர் **ந.கு.முல்லைச் செல்வன்**

மொழி : தமிழ், ஆங்கிலம்

உரிமை–வெளியீடு : தமிழ்த்தாய் அறக்கட்டளை
மாரியம்மன் கோவில்,
தஞ்சாவூர்–613 501.
தொலைபேசி: 04362268167
கைபேசி: 9443938797, 7530002454.

அளவு : டெம்மி

பக்கங்கள் : 318

விலை : ரூ.250/–

ISBN : **978-81-909877-5-2**

நூல் வடிவமைப்பு: பரிதி பதிப்பகம்,
சோலையார்பேட்டை.
வேலூர் மாவட்டம்.
கைபேசி: 8098908840, 7200693200

# விடுதலை பற்றிய நோக்கில் திருக்குறளும் சைவசித்தாந்தமும் - ஓர் ஒப்பீட்டு ஆய்வு

கோ.தர்ஷிகா

7

## ஆய்வுச்சுருக்கம்.

தமிழர் சிந்தனை மரபில் திருக்குறளும் சைவசித்தாந்தமும் காத்திரமான இடத்தினைப் பெற்றுள்ளன. முப்பொருள் உண்மையினைப் பேசுகின்ற சைவசித்தாந்தமானது தனது இறுதி இலக்காக ஆன்மாவானது அறியாமையாகிய பாசங்களில் இருந்து நீங்கி இறைவனை அடைதலாகிய விடுதலையை குறிப்பிடுகிறது. இருப்பினும் இல்வாழ்வினை துறந்த நிலையில் விடுதலையை வலியுறுத்தவில்லை. மனித சமுக உள நிலைப்பாடுகளுக்கு இயைந்த வகையில் மனித வாழ்வின் விழுமியங்களை மேம்படுத்தி உயர்ந்த உன்னத நிலையை அடையலாம் என்பதனை சைவ சித்தாந்தம் வெளிப்படுத்தி நிற்கிறது. இந் நிலைப்பாட்டினையே வள்ளுவரும் தனது குறள்களில் வெளிப்படுத்தியுள்ளமை சிறப்பிற்குரியதாகும். அறம், பொருள், இன்பம், வீடு என்கின்ற புருடார்ந்தங்களை சைவ சமயத்தவர்கள் ஏற்று நின்ற பொழுதும் வள்ளுவர் வீடாகிய விடுதலை பற்றி தனித்து குறிப்பிடாது அறம், பொருள், இன்பமாகிய மூன்றினூடாக விடுதலை பற்றிக் கூறுகின்ற வகையில் திருக்குறளிலும் சைவ சித்தாந்தத்திலும் விடுதலை பற்றிய சிந்தனைகளை ஒப்பிட்டு ஆராய்வதாக இவ் ஆய்வு அமைகிறது. “திருக்குறளிலும் சைவசித்தாந்தத்திலும் முன்வைக்கப்படுகின்ற விடுதலை பற்றிய சிந்தனைகள் ஒத்திசையும் தன்மையினைக் கொண்டுள்ளன”. என்ற கருதுகோளினை அடிப்படையாகக் கொண்டு இவ் ஆய்வு நகர்த்திச் செல்லப்படுகிறது. இவ்வாய்விற்கு பண்புசார் நுட்பம் பயன்படுத்தப்படுகிறது. இவ் ஆய்விற்காக முதன் நிலை மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளும் பயன்படுத்தப் படுகின்றன. இங்கு ஆய்வு முறையியல்களாக பகுப்பாய்வு

முறையியல், ஒப்பீட்டு முறையியல், விபரணமுறையியல் என்பன பயன்படுத்தப்படுகின்றன. ஆய்வு முடிவாக திருக்குறளும் சைவசித்தாந்தமும் இறுதி இலக்காக விடுதலையை முன்வைக்கின்ற போதிலும் அவை மனித வாழ்வினை வெறுக்காத பாங்கும் மனித வாழ்வினை சீர்மைப்படுத்துவதாகவும் அமைகிறது.

திறவுச்சொற்கள். விடுதலை, திருக்குறள், சைவசித்தாந்தம், அறம்.

## ஆய்வு அறிமுகம்.

மனித வாழ்வானது பல துறையினருக்கு ஆய்வுக்குரிய கருப்பொருளாக அமைகிறது. உலகப் பொது மறையாக ஏற்றுக்கொள்ளப்படும் திருக்குறள் மனிதவாழ்விற்கு மட்டுமல்ல அதற்கு அப்பாற்பட்ட விடுதலை பற்றிய சிந்தனைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளதுடன் பல்துறைசார்ந்த ஆய்வுகளின் தேடல்களிற்கான விடைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இந்த வகையில் வாழ்வியலுக்கான அடிப்படைகளான அறம், பொருள், இன்பம் என்ற மூன்றும் சமநிலைப்பட்டதாகவும் சமாந்தரமாகவும் திருக்குறளில் வெளிப்படுத்தப்படுகிறது. இங்கு திருவள்ளுவர் வீடு பற்றி நேரடியாக கூறாவிட்டாலும் இம் மூன்றினையும் செவ்வனே கடப்பவர்கள் இறைவனை அடைய முடியும் அதாவது விடுதலை அடைய முடியும் என்பதனை உட்கிடையாக வெளிப்படுத்தியுள்ளார்.

தமிழர் சிந்தனை வளர்ச்சி வரலாற்றிலே சைவசித்தாந்த மெய்யியல் சிறப்பானதொரு வகிபாகம் கொண்டதொன்றாக விளங்குகிறது. சிவனை முழுமுதற்கடவுளாகக் கொண்டுவிளங்குகின்ற சைவசித்தாந்தமானது தொன்மையான வரலாற்றினையும் ஒழுக்கவியல் சார் மேம்பாடுகளையும் தன்னகத்தே கொண்டு திகழ்கின்றமையைக் காணலாம். 'மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்.' என்று போற்றத்தக்க வகையில் நீதிநெறிசார்ந்த சமயமாகவும் தத்துவமாகவும் விளங்குவது குறிப்பிடத்தக்கதாகும். மனித வாழ்வினை சீரமைக்கும் வகையிலும் மேலும் வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் வாழ்கை நெறியுமாக சைவசித்தாந்தம் அமைந்துள்ளது. இதனையே பிற்பட ' மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்' என இவ்வுலக

வாழ்வை முதன்மைப்படுத்தி அதன் பின்னர் விடுதலையை வேண்டி நிற்கிறது. சைவசித்தாந்தத்தின் இறுதி இலக்காக விடுதலை வலியுறுத்தப்பட்டாலும் பௌத்தம், ஜைனம் என்பன இல்லறத்தைப் பழித்து நிற்க சைவசித்தாந்த நிலைப்பாட்டில் இல்லற வாழ்வினை சிறப்பானதாக அமைத்து அதில் மிதமான இன்பத்தை பெற கூறிநிற்கிறது. இதன் பின்னர் ஆன்மிக வாழ்வினை வலியுறுத்துவதன் ஊடாக துறவறம் வலியுறுத்தப்படுகிறது. இதே நிலைப்பாட்டினை வள்ளுவர் திருக்குறளில் முன்வைத்துள்ளமை சிறப்பிற்குரியது. அதாவது இவர் அறத்துப்பாலில் இல்லறத்தை முதன்மைப்படுத்திய பின்னரே துறவறத்தினை முன்வைப்பது குறிப்பிடத்தக்கது.

## ஆய்வின் நோக்கம்.

திருக்குறளில் காணப்ப கின்ற விடுதலை பற்றிய சிந்தனைகளை வெளிப்படுத்தல்.

சைவசித்தாந்தம் வெளிப்படுத்தி நிற்கும் விடுதலை பற்றிய சிந்தனைகளையும் திருக்குறள் வெளிப்படுத்தி நிற்கும் விடுதலை பற்றிய சிந்தனைகளையும் ஒப்பீட்டு ரீதியில் ஆராய்தல்.

## ஆய்வின் கருதுகோள்.

திருக்குறளிலும் சைவசித்தாந்தத்திலும் முன்வைக்கப்படுகின்ற விடுதலை பற்றிய சிந்தனைகள் ஒத்திசையும் தன்மையினைக் கொண்டுள்ளன.

## ஆய்வு முறையியல்.

இவ்வாய்விற்கு பண்புசார் நுட்பம் பயன்படுத்தப்படுகிறது. இவ் ஆய்விற்காக முதன் நிலை மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளும் பயன்படுத்தப் படுகின்றன. திருக்குறளும் மெய்கண்ட சாஸ்திர மூல நூல்கள் முதன்நிலைத் தரவுகளாகவும் ஏனைய உரை நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள், இணையத்தள தகவல்கள் என்பன இரண்டாம் நிலைத்தரவுகளாக காணப்படுகின்றன.

இங்கு ஆய்வு முறையியல்களாக பகுப்பாய்வு முறையியல், ஒப்பீட்டு முறையியல், விபரணமுறையியல் என்பன பயன்படுத்தப்படுகின்றன. அதாவது திருக்குறள் மற்றும் மெய்கண்ட சாஸ்திர நூல்களில் காணப்படும் விடுதலை பற்றிய சிந்தனைகளை பகுத்தாராயும் வகையில் பகுப்பாய்வு முறையியலும்

திருக்குறள் மற்றும் மெய்கண்ட சாஸ்திர நூல்களில் காணப்படும் விடுதலை பற்றிய சிந்தனைகளை ஒப்பிட்டு நோக்கும் வகையில் ஒப்பீட்டு முறையியலும் இவ் இரண்டிலும் முன்வைத்துள்ள சிந்தனைகளை விபரிக்கின்ற வகையில் விபரண முறையியலும் பயன்படுத்தப்படுகின்றன.

திருக்குறளும் சைவசித்தாந்தமும் முன்வைக்கும் விடுதலை பற்றிய சிந்தனைகள்.

சைவசித்தாந்தத்தில் முப்பொருள் உண்மையில் முதன்மைப் பொருளாக இறைவன் முதன்மைப்படுத்தப்படுகின்றான். வள்ளுவரும் தனது முதற் குறள் வரியிலேயே "ஆதி பகவன் முதற்றே உலகு" என இவ் உலகானது இறைவனை முதன்மையாகக் கொண்டுள்ளது எனக் கூறிநிற்கின்ற வகையில் சைவ சித்தாந்தம் கூறுவது போல இவ் இறைவனை அடைதலையே இலக்காக வள்ளுவரும் மறைமுகமாக வலியுறுத்துகிறார்.

வாழ்வியலில் மனிதன் தேடிய தேட்டத்தின் மதிப்பீடு மரணத்தின் பின்னால் அந்த மனித உயிரி பெறப்போகும் பெறுகையை நிலைப்படுத்தும். அன்பின் வழியதாகவே உயிர் நிலை அமைய வேண்டும் என்பதற்கிணங்க அறக்கோட்பாடுகளை வகுத்து அதன் வழியாக அனைத்தையும் அன்பே சிவமாகத் துய்க்கச் செய்து அதன் வழி மனித விடுதலையை பெற வழிவகுத்தனர். இதன் சாராம்சமாக சிவஞான போதத்தின் 'செம்மலர் நோன் தாள் சேரல் ஒட்டா.....' எனத் தொடங்கும் பன்னிரண்டாம் சூத்திரம் அமையப் பெற்றுள்ளது . இதனையே வள்ளுவர்,

**"வீழ் நாள் படாமை நன்று ஆற்றின் அஃது ஒருவன்**
**வாழ்நாள் வழியடைக்கும் கல்' என்கிறார்".**

சைவசித்தாந்தத்தைப் பொறுத்தவரையில் கன்ம வினையினை கணக்கீடு செய்து கொண்டு அதன் அடிப்படையிலே விடுதலை என்பது நிலை நிறுத்தப்படுகிறது. இதன் நிலைப்பாட்டினையே வள்ளுவரும் தனது ஊழ் என்ற அதிகாரத்தில் குறிப்பிட்டுள்ளார்.

**"ஊழின் பெருவலி யாவுள மற்றொன்று**
**சூழினும் தான்முந் துறும் "**

அதாவது வினைப்பயனை எம்மால் தடுத்துக்கொள்ளமுடியாது. இதனையே சிவஞான சித்தியாரில் பின்வரும் பாடல் தெளிவு

படுத்துகின்றது.

**’இருவினை யின்பத் துன்பத் திவ்வுயிர் பிறந் திறந்து**
**வருவது போவதாகு மன்னிய வினைப் பயன்கள்’**

சைவசித்தாந்தம் கூறிநிற்கின்ற வகையில் விடுதலையினை எட்டவிடாது தடுப்பது மும்மலங்களே. அதாவது ஆன்மாவின் சுய அறிவை மழுங்கடித்து உண்மை இயல்பை உணரவிடாது செய்கிறது. ஆணவத்தின் குணம் அறியாமை என்பது தெளிவாவதுடன் இவ் அறியாமையையே ஆன்மாக்களின் துன்பத்திற்கு காரணமாகும் இதிலிருந்து நீங்குதலே விடுதலையாக சைவசித்தாந்திகள் எடுத்துரைப்பார். இதனையே வள்ளுவர் மெய்யுணர்தல் என்ற அதிகாரத்தில் விளக்கி நிற்கின்றார்.

**“பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பென்னும்**
**செம்பொருள் காண்ப(து) அறிவு”.**

அதாவது அறியாமையினால் தான் பிறவிச்சக்கரத்தில் மீண்டும் மீண்டும் பிறப்பெடுப்பதாகவும் அழியாத பொருளை அறிதலே இப்பிறவித்துன்பத்தில் இருந்து நீங்குவதற்கான வழியாகக் கூறுகிறார். இதே போல

**’பொருளல்ல வற்றைப் பொருளென்;று உணரும்**
**மருளானாம்; மாணாப் பிறப்பு.’**

அதாவது இங்கு வள்ளுவரும் பொய்ப்பொருளை மெய்ப்பொருளென்று உணரும் அறியாமைதான் எம்மை மீண்டும் மீண்டும் பிறப்பெடுக்க காரணமாகிறது என்று கூறுவதன் மூலம் மறைமுகமாக பாசங்களின் செல்வாக்கினைத் தெளிவுபடுத்துகிறார்.

மேலும் வள்ளுவர் தனது துறவு என்ற அதிகாரத்தில்

**’யான்என(து) என்னும் செருக்கறுப்பான் வானோர்க்(கு)**
**உயர்ந்த உலகம் புகும்’**

இங்கு நான், எனது என்ற அறியாமையை நீக்கியவனுக்கே விடுதலை கிடைக்கும் என்கிறார். இச்சிந்தனையும் சைவசித்தாந்த விடுதலை பற்றிய சிந்தனையுடன் இசைந்து காணப்படுகிறது. இறுதி இலக்கான முத்தியினை அடைய சரியை, கிரியை, யோகம், ஞானம் போன்ற நால்வகை மார்க்கங்களைச் சைவ சித்தாந்தம் கூறுகின்றது.

**“.....திறத்தடைவர் இதிற் சரியை கிரியா யோகஞ்**

**செலுத்திய பின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்'**

சைவசித்தாந்தமானது சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு மார்க்கங்களை விடுதலைக்குரிய பாதையாக முன்மொழிகிறது. திருக்குறள் இம் மார்க்கங்கள் பற்றி நேரடியாக கூறாவிடினும் மறைமுகமாக வலியுறுத்தி நிற்கிறது எனலாம். சரியைத் தொண்டிற்கு அடிப்படை பிற உயிர்களை ஓம்புதல் ஆகும். உதாரணமாக கோலம் போடுதலானது எறும்பு போன்ற சிறு உயிர்களின் உணவிற்காகவே. இந்நிலைப்பாடு அன்புடைமை என்ற அதிகாரத்தில்' அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு' என்ற குறள் வரியின் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது. கிரியை நெறி என்பது இறைவனை அர்ச்சித்தல், போற்றுதல் என்பனவும் உள்ளடங்கும். வள்ளுவர் இதனையே

**கற்றதனால் ஆய பயனென்கொல், வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்'** என்ற குறள் 'மூலம் தெளிவு படுத்தப்படுகிறார்.

முத்தி நிலையைக் கொடுக்கும் ஞானமார்க்கமே நால்வகை மார்க்கங்களிலும் மேலானது. அதாவது ஞானத்தின் மூலம் ஆணவம் முற்றாக வலிகுன்றும் என்பதனை '....விரிசிவஞானத்தில் முற்றும் வீயுமே' என்ற பாடல் விளக்கி நிற்கிறது.

உண்மையிலும் ஞானம் என்பது மெய்ப்பொருள் பற்றிய அறிவாகும். ஐம்புலன் அடக்கமுள்ளவராயினும் மெய்ப்பொருளை அறியாவிடின் பயனில்லை என்று கூறுவதன் மூலம் இங்கு பயனாக வள்ளுவர் விடுதலையை மறைமுகமாக வலியுறுத்தி நிற்கிறார். இதன்னையே வள்ளுவர், பின்வரும் குறளில் தெளிவுபடுத்துகிறார்.

**"ஐயுணர்(வு) எய்தியக் கண்ணும் பயமின்றே,**
**மெய்யுணர்(வு) இல்லாதவர்க்கு"**

வள்ளுவர் இவற்றுக்கெல்லாம் மேலாக 'அவா அறுத்தல்' என்ற அதிகாரத்தில் ஆசையினைத் துறத்தல் விடுதலைக்கான மார்க்கமாக பரிந்துரைக்கின்றார். இந்நிலைப்பாடானது பௌத்தம் கூறிநிற்கின்ற 'ஆசையே துன்பத்திற்கு காரணம்' என்ற சிந்தனையை

ஒத்ததாக காணப்படுகிறது. இருப்பினும் பௌத்தம் வாழ்வே துன்பம் எனக்கூறி வாழ்வினைத் துறக்கக் கூறிநிற்கிறது. ஆனால் வள்ளுவர் வாழ்வியல் அறத்தைக் கூறிய பின்னரே துறவறம் பற்றிக் கூறிநிற்பது சைவசித்தாந்த நிலைப்பாட்டினை வெளிப்படுத்துவதாக அமைகிறது. இந்த வகையில் வள்ளுவர்

**"அற்றவர் என்பவர் அவா அற்றார்;மற்றையார்**
**அற்றாக அற்ற(து)இலர்"**

என்ற குறளில் ஆசையற்றவரே பிறவியற்றவர் எனத் தெளிவுபடுத்துகிறார்.

**"வேண்டுதல் வேண்டாமை இலான் அடி சேர்ந்தார்க்கு**
**யாண்டும் இடும்பை இல"**

என்ற குறள் மூலம் இறைவனின் பாதாரவிந்தங்களை சேர்பவருக்கு துன்பங்கள் எப்பொழும் வருவதில்லை என்று வள்ளுவர் மேற்குறித்த குறளிலே கூறுவது போல சைவ சித்தாந்தமும் இறைவனின் திருவடிகளை அடைதலே இத்தகைய துன்ப நீக்கத்தை தரும் என்பது விடுதலை பற்றிய முடிபாகும். இதனையே சிவஞான போதம் 'அயரா அன்பில் அரன் கழல் செலுமே' என வெளிப்படுத்தி நிற்கின்றது.

**முடிவுரை.**

சைவசித்தாந்தமும் திருக்குறளும் தமிழர் சிந்தனை வரலாற்றில் முக்கிய இடத்தினைப் பெற்றிருப்பதுடன் இவை இரண்டுமே மனிதன் இவ்வுலகில் செம்மையான வாழ்வினை வாழவேண்டும் என்ற நிலைப்பாட்டினைக் கூறுவதோடு அறவழியில் வாழ்பவனே வாழ்வின் பெரும்பயனான இறைவனடி சேரமுடியும். இதுவே விடுதலை என்பதனையும் வெளிப்படுத்தி நிற்கிறது.

**கோ.தர்ஷிகா**
விரிவுரையாளர் (Prob)
மெய்யியற்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.